வெ.வெ.எண்:06 நாள்:02.08.2019

# பத்திரிக்கைச் செய்தி

## புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

படித்த வேலைவாய்ப்பற்ற, முதல் தலைமுறையினரை தொழில் முனைவோராக்கும் பொருட்டு தமிழக அரசு புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் (நீட்ஸ்–NEEDS) என்ற திட்டத்தினை உருவாக்கியுள்ளது. 25% அரசு மானியத்துடன் கூடிய கடனுதவி திட்டத்தில் பட்டம், பட்டயம், தொழிற்கல்வி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தொழில் பயிற்சி சான்றிதழ் பெற்ற இளைஞர்கள் மற்றும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் உடன் விண்ணப்பித்து பயன் பெறலாம்.

மேலும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுய தொழில் துவங்கி முதலாம் தலைமுறை தொழில் முனைவோரை உருவாக்க கீழ்க்கண்ட திட்டப்படி கடன் உதவி மற்றும் மானியம் வழங்கப்படுகிறது.

1. **கடன் திட்டம் :**

   இத்திட்டத்தில் உற்பத்தி மற்றும் சேவை தொழில்களுக்கு குறைந்த பட்சமாக ரூ.10.00 இலட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.5 கோடி வரை தேசியமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் மூலம் 25% மான்யத்துடன்(அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் ) நிதியுதவி வழங்கப்படும். 3% பின்முனை வட்டி மான்யமும் வழங்கப்படும்.

2. **கடன் பெற தகுதிகள் :**

   இத்திட்டத்தின் கீழ் கடன் பெற விண்ணப்பிக்கும் பொது பிரிவினருக்கு 21 வயது முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். சிறப்பு பிரிவினருக்கு (பட்டியல் இனத்தவர்/பிற்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சிறுபான்மைனர்/திருநங்கைகள்/மாற்றுத் திறனாளிகள்/மகளிர்/மற்றும் முன்னாள் இராணுவத்தினர்) ஆகியோர்களுக்கு வயது 45க்குள் இருக்க வேண்டும். கல்வித் தகுதியாக பட்டம், பட்டயம், ஐடிஐ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தொழிற் சார் பயிற்சி படித்த இளைஞர்கள் மற்றும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் உடன் விண்ணப்பிக்கலாம். மத்திய மற்றும் மாநில அரசுகளின் இதர திட்டங்கள் மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற்றவர்கள் இத்திட்டத்தின்கீழ் கடன் பெற தகுதியற்றர்கள் ஆவார்கள்.

3. **பயனாளிகள் பங்களிப்பு :**

இத்திட்டத்தின் கீழ் கடன் பெறும் பொது பிரிவு பயனாளிகள் தங்களுடைய பங்காக திட்ட மதிப்பீட்டில் 10 சதவிகிதம் செலுத்த வேண்டும். சிறப்பு பிரிவு பயனாளிகள் அதாவது பட்டியல் இனத்தோர், பட்டியல் இனத்தைச் சார்ந்த மலைவாழ் பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டவர், சிறுபான்மையினர், மகளிர், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் 5

சதவிகிதம் தங்களது பங்கீடாக செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் 2019–2020–ம் ஆண்டிற்கு கீழ்கண்ட தொழில் திட்டங்கள் வங்கிக்கடன் வசதி பெற தகுதி வாய்ந்ததாக தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. எர்த் மூவிங் இயந்திரங்கள் கோல்டு செயின் ரெப்ரிஜிரேட்டேடு இயந்திரம் ,LPG புல்லட் டேங்கர் டிரக், பிளை ஆஷ் கேரியர் டேங்கர் டிரக் ,டிரக்– இன்பில்ட் கன்டெய்னர், ரோடு ரோலர், பிட்டுமன் மிக்ஸிங் & லேயிங் இயந்திரம், டேங்கர் டிரக்ஸ் வாடகைக்கு விடுதல், க்ரெய்ன்ஸ் போர்க் லிப்ட் இயந்திரங்கள், கான்கிரீட் மிக்ஸர் மெஷின், போர்வெல் ரிக்ஸ் வாகனம், ரெடிமிக்ஸ் கான்கிரீட் வாகனம், ரெகவரி வெகிக்கிள், கான்கிரீட் பைலிங் வெகிக்கிள், LPG கேஸ் கேரியர் வெகிக்கிள், மொபைல் கேட்டரீங் சர்வீஸ்,

இந்த திட்டத்தில் விண்ணப்பம் செய்து பயன்பெற விரும்பும் பயனாளிகள் (www.msmeonline.tn.gov.in/needs) என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன் பெற பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், சத்தியமூர்த்தி நகர், தாந்தோணிமலை, கரூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.